**MCOP 92/2023**

**24.10.2024**

**ம.சா.1. எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த தேதி மற்றும் நேரம் தெரியுமா என்றால் 30.09.2019 நேரம் காலை 07.30 மணியளவில் நடந்தது. விபத்து எந்த இடத்தில் நடந்தது என்றால் திருத்துறைப்பூண்டி அண்ணா சாலையில் உள்ள தலைமை தபால் அலுவலகத்திற்கு அருகில் நடைபெற்றது. நான் சாலையில் ஒருபகத்தில் இருந்து அடுத்த பக்கத்திற்கு சாலையை கடக்க முயன்ற பொழுது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல விபத்து தேதியில் நானும் எனது நண்பர் பாண்டியனும் சாலை ஓரமாக பேசிக்கொண்டிருந்தோம். அப்போது வேகமாக வந்த அரசு பேருந்து எனது வலது காலில் மோதி டயர் என் காலமீது ஏறி இறங்கியதால் எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. அப்போது அந்த பேருந்தில் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் இறங்கி ஓடிவிட்டார்கள். பாண்டியன் என்பவருக்கு ஏதேனும் காயம் ஏற்பட்டது என்றால் தொடையில் காயம் ஏற்பட்டது. என்னை சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றார் என்றால் அருகில் உள்ள ஆட்டோ ஸ்டேன்டில் இருந்து ஒரு நபர் என்னை சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். நான் மயக்கமாக இருந்ததால் யார் என்னை அழைத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. நான் மேல்சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு ஏதேனும் சென்றேனா என்றால் திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். 30.09.2019 முதல் 15.10.2019 வரை சிகிச்சை பெற்று டிஸ்சார்ஜ் ஆகிவிட்டேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ செலவு ரூபாய் 50,000/– என்றால் சரியல்ல நான் ரூபாய் 3 இலட்சத்துக்கு மேல் செலவு செய்துள்ளேன். நான் 3 இலட்சத்திற்கு மருத்துவம் பார்த்தற்கான மருத்துவ இரசீதுகள் வைத்துள்ளேனா என்றால் 50,000/– மட்டும் தான் உள்ளது மீதமுள்ள இரசீதுகள் அழிந்துபோய்விட்டது. வெளிநாட்டில் நான் என்ன வேலை பார்த்தேன் என்றால் கொத்தனார் வேலை பார்த்தேன். நான் வெளிநாட்டில் மாதம்

ரூபாய் 30,000/- வரை சம்பாரித்தேன் என்றால் சரியல்ல நான் கூடுதலாக வேலை பார்த்து மாதம்  ரூபாய் 50,000/- வரை சம்பாரிப்பேன். தற்போது நான் கொத்தனார் வேலை தான் பார்த்து வருகிறேன் என்றால் தற்போது விபத்து ஏற்பட்டதால் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு பொருட்களை தூக்கி வேலை செய்ய முடியவில்லை. விபத்து நடந்த இடமானது அண்ணா சாலை என்றும், அதிகமாக மக்கள் கூட்டம் உள்ள பகுதி என்றும் என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.